புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

==================================================================

# மலேசியக் கவிதைகளின் போக்கும் பொருளும்

==================================================================

**ஆய்வாளர்**
*வீ.பாரதிராஜா*
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*பச்சையப்பன் கல்லூரி*
*சென்னை-30*

**நெறியாளர்**
*முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர்*
*தமிழ்த்துறைத் தலைவர் & இணைப்பேராசிரியர்*
*பச்சையப்பன் கல்லூரி*
*சென்னை-30.*

==================================================================

**ஆய்வுச்சுருக்கம்:**

*இலக்கியம் வெறும் பொழுது போக்குக்காக மட்டும் படைக்கப் பெறுவதன்று. இலக்கியம் எழுதும் கவிஞர்களும் ஏதோ நினைத்து, எப்படியோ எழுதி, எழுதுவதை எதையும் இலக்கியம் பாடிவிடலாமென்று எழுதுவதுமில்லை, அப்படி மீறி எழுதினாலும் அவை இலக்கிய மரியாதையைப் பெறுவதுமில்லை. எனவே மக்கள் வாழ்வினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் அவர்களின் எதிர்காலச் சமூகத்தைச் செம்மையாக்கி வழிகாட்டியாகவும் அமைவது இலக்கியமாகும். உலகநாடுகளில் அடிமைத்தொழில் செய்தவர்களில் பெரும்பான்மையானவர்களாகத் தமிழர்கள் விளங்கியுள்ளதைக் காணமுடிகிறது. அவ்வாறு கூலித்தொழிலாளிகளாக ஏற்றுமதி செய்யப்பட்டு மலேசிய மண்ணில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியலைப் பேசும் மலேசியக் கவிதைகளின் போக்கும் பொருளும் ஈர்க்கும் ஆற்றலுடையனவாய் அமைந்துள்ளன. உழைக்கச் சென்ற மக்களின் துயரம் தோய்ந்த வாழ்வியல் அனுபவங்களை இலக்கியத்தின் வாயிலாக பதிவு செய்துள்ளனர். அப்படைப்புகளில் மேலோங்கிக் காணப்படுகிற கருத்தாழத்தையும், மலேசிய மண்ணின் கோரமுகத்தையும், மலேசிய இயற்கை வளத்தையும், அக்காலத்தில் நிகழ்ந்த சமூகத்தின் சூழ்நிலையையும், கங்காணியரைச் சித்தரிக்கும் கவிதைகளின் பொருண்மை நோக்கமும், அன்றைய முதலாளித்துவ சமூகத்தின் கண்ணோட் டத்தினையும், பெண்ணிய சிந்தனையும்,*

சாதியக் கொடுமையும் , உழைப்புச் சுரண்டலையும், வர்க்கப் பிரச்சனையும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

***Keywords:* கூலித்தொழிலாளி, கங்காணி,பினாங்கு, ரப்பர் தோட்டம், மலேசியா, மனிதச் சந்தை**

***முன்னுரை:***

*மனிதன் வாழ்வதற்குரிய உலகங்கள் இரண்டு. ஒன்று நிலம்,பொழுது ஆகிய வரம்புகளுக்குட்பட்டது. மற்றொன்று நிலம்,பொழுது ஆகிய வரம்புகளுக்கு உட்படாதது. ஒன்று முடிவுடையது. மற்றொன்று முடிவிலாதது. இப்படி முடிவுடைய ஒரு பகுதியிலிருந்து நிலமும் பொழுதையும் கொண்ட தமிழர்கள் நிலம்பெயர்ந்து மாற்று நிலப்பரப்பிற்கு அடிமையாக விற்கப்பட்டனர். அப்படி மிருகங்களை விற்பதைப்போல மலேசியாவிற்கும் உலகின் பிற தீவுகளுக்கும் விற்கப்பட்ட தமிழர்களின் வாழ்க்கை எப்படிப்பட்ட துயரங்களையும் துரோகங்களையும் பசியையும் ஏமாற்றங்களையும் சந்தித்தனர். அந்நிலப்பரப்பில் கூலிக்குச் சென்ற தமிழர்களின் இன்னல்களையும், தங்குவதற்கு இடமில்லாமல் வாழ்ந்த சூழ்நிலையினையும், கங்காணியராக இருந்த சாதி மேலாதிக்க மனோ நிலையுடையவர்களின் இழிசெயலையும், அடிமையாய் வாழ்ந்த ஏழைத் தமிழர்களின் வாழ்வியல் முறையினையும் மலேசியத் தமிழ்க்கவிதைகள் எவ்வகையில் பதிசெய்துள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.*

***'மனிதன்' விலைக்கு விற்பனை:***

*போர்த்துக்கீசியர் மற்றும் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியர் போன்ற உலக வல்லாதிக்க நாடுகளின் கோரத்தில் தமிழ்நாடு சிக்கியிருந்த கொடிய காலம் அது. அன்று நிலவிய பஞ்சமும் தமிழ்மண்ணில் ஏற்பட்ட உணவு பொருளாதாரச் சூழலும் உலக வல்லாதிக்காரர்களின் ஆசை வார்த்தைகளை தமிழர்கள் நம்புவதற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டன. தமிழர்களின் வறுமையைப் பயன்படுத்தி டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் அவர்களின் ஆட்சியின்கீழ் இருந்த உலகின் பிற தீவுகளுக்குக் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டனர். அப்படி ஏற்றிச் செல்லப்பட்ட தமிழ்மக்களை பிற நாட்டினர் மிருகங்களை காசுகொடுத்து விரும்பி வாங்குவது போல் வாங்கிச் சென்றனர். அவர்கள் தமிழ் அடிமைகளை விரும்புவதற்குக் காரணம் தமிழர்கள் குறைந்த ஊதியத்திற்குக் கூடுதல் நேரமெடுத்து வேலை செய்வார்கள், செய்யும் தொழிலில் அறத்தோடும் இருந்துள்ளனர். அதுமட்டுமின்றி 'முதலாளி சொல்லைத் தலைமேல் வைத்து செயல்படும் குணமும்' பிற நாட்டினரைக் கவர்ந்தன. அன்று உலகின் குறிப்பிட்ட சில பகுதிகள் மனிதச் சந்தையாக விளங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தீவுகளுக்குக் கப்பலில் வந்திறங்கியவர்களுடன் கூலிகளைக் கண்காணிப்பதற்குக் கூடவே கங்காணிகளும் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு தோட்டத் தொழிலாளியாக ஏற்றிவரப்பட்ட தமிழர்கள் தங்கிய பகுதிகள் எவ்வாறெல்லாம் இருந்தன என்பதை*

***முற்றா முலையள் முதிரா மடமொழி***
***முற்றாய் வென்ற மணிமொழிக் கிள்ளை***
***அரவுக் கூட்டம் அருகிய ஆட்டம்***
***பறவைக்கூட்டம் பல்கவின் மூட்டம்***
***சிங்கம் செறுபுலி செந்நாய் வேழம்***
***தங்கும் செல்வம் தவத்திரு செல்வம்*[1]**

*என்று ப.மு.அன்வர் ‘எம்மலை நாடு’ எனும் தலைப்பில் பதிவு செய்துள்ளார். இன்றைய மலேசிய நாடானது தொழில் வளர்ச்சி காண்பதற்குக் காரணமான தமிழர்கள் வாழ்ந்த ரப்பர் மரக்காடுகளில் கொடிய பாம்புகளும் அச்சமூட்டும் சிங்கங்களும் புலிகளும் செந்நாய்களும் யானைகளும் பறவைகளும் கொடும் நச்சுப்பூச்சிகளுடனேயே வாழ்ந்தனர். அப்படிப்பட்ட காலத்தில் எத்தனையோ தமிழ்க்குடும்பங்கள் மடிந்துள்ளன. துயரம் தோய்ந்த வாழ்வியலைத் தமது படைப்பின் மூலம் இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் கடந்த காலச் சூழ்நிலையைக் கவிதையாகப் படைத்துள்ளார்.*

***மலேசிய இயற்கை வளம்***

*மனித வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் அது எவ்வாறு கவிதையோடு கலந்து ஒத்தியங்குகிறது என்பது தெளிவாகும். பலரும் இதனைக் கூர்ந்து நோக்குவதில்லை சிந்திப்பதில்லை. மொழி எதுவாயினும் கவிஞர் எதுவாயினும் வடிவம் எதுவாயினும் இயற்கையைப் பாடுவது தொன்றுதொட்டு நிலவிவரும் இலக்கிய மரபாகும்.* ***இயற்கையின் தாக்கம் மனிதனுடைய இன்பதுன்ப உணர்வுகளை மிகுதிப்படுத்துகின்றது***[2]. *ஒவ்வொரு நாடும் அந்நாடிலுள்ள இயற்கை வளத்தை வைத்தே அந்நாட்டின் வளத்தைக் கணக்கிடுகின்றனர். குறிப்பாக தமிழர்கள் கூலித் தொழிலாளியாகச் சென்றவர்கள் பல்வேறு துன்பங்களைச் சந்தித்தாலும் தான் வாழும் நாடான மலேசிய நாட்டின் வளம்கூறுவதில் சொல்லால் விவரிக்கமுடியாத மகிழ்ச்சியைக் கவிஞர் வீரய்யா*

***எங்கெங்குப் பார்த்தாலும் எழில்ரப்பர் நன்மரங்கள்***
***எடுத்தினிதாய் விளக்கிடுமே எங்கள்நில வளத்தை***
***மங்காம லொளிகூட்டி மாநிலத்தில் முதன்மைபெறும்***
***மாச்செல்வமாம் ஈயச்சுரங்கம் சுடர்கொளுத்தும்***
***தெங்குடனே எண்ணெய்பனை மேலும் அன்னாச்சிப்பழம்***
***செந்நெல் கரும்பொடு தேடற்கரிதான***
***பொங்கு வளஞ்செறிந்து பூரிக்கும் எங்களரும்***
***தங்கமலேசியத் தாய்நாடு வாழியவே***[3]

*என்று ரப்பர் மரங்களும் பேரீச்சமரங்களும் ஈயச்சுரங்களும் செந்நெல்லும் கரும்பும் அன்னாச்சிபழமும் நிறைந்து வளத்தோடு இருக்கும் நிலையை எடுத்துக்கூறும் வண்ணமாக பாடியுள்ளார்.*

*இயற்கை அழகினையும் வெள்ளையாக பேசிவிட்டு கழுத்தறுக்கம் போக்கு குள்ளநரித்தனம் என்பர். இத்தகைய இழிந்த நோக்குமும் பார்வையும் இயற்கைக்குக் கிடையாது.* ***கலைஞர் அனைவரும் இயற்கைக் காட்சிகளில் பெரிதும் ஈடுபாடுகொண்டவர் என்பது உண்மையாயினும் இலக்கியக் கலைஞராகிய புலவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினராக இருந்தார்கள் என்பதனை அவர்களின் பாடல்கள் உணர்த்துகின்றன.***[4]

***சமூக கண்ணோட்டம்***

*கவிதை எழுதுகிற படைப்பாளனுக்கு இந்தச்சமூகத்தை ஆழ்ந்து நோக்குகிற கண்ணோட்டம் இருக்க வேண்டும். மேலும்* ***உண்மையான சமுகப்பொறுப்புணர்ச்சி ஒவ்வொரு கவிஞனுக்கும் வந்தாக வேண்டும்.*** *சமுதாயம் என்பது மக்கள் திரள், சன்னிதானம் ,பேட்டி என தமிழ்லெக்சிகன் பொருள் தருகின்றது. கூட்டாக வாழ்கின்ற மானுட சமுதாயத்தின் மீதான அக்கறையை கவிஞர்கள் கவிதையாக வெளிப்படுத்துகின்றனர்.* ***கவிதை***

***என்பது போதைக்குரியதல்ல; வாழ்க்கைக் களத்தின் போர்வாள்***[6] *அத்தகைய வலிமை வாய்ந்த கருவியை மலேசியக் கவிஞர்கள் கையாண்டுள்ள திறத்தைப் பார்க்கலாம்.*

*மலேசிய நாட்டில் நிலவுகின்ற வறுமை, கைம்பெண் மறுமணம்,சாதி வேறுபாடு,அதிகார வர்க்கம் போன்ற கொடுமைகளைக் கவிஞர்கள் பதிவிட்டுள்ளனர். குறிப்பாக ரப்பர் தோட்ட மரங்களில் ரப்பர் எடுக்க சென்ற தமிழ்நாட்டினரே தமிழர்களை ஏமாற்றி சீனக்காரர்களுக்கு அடிமையாக நடத்தியதை பற்றி 'இனவிலங்கு'*

***வனத்தில் வாழும் விலங்கும் கூட***
***இனத்தில் என்றும் இழிவு செய்யா***
***இனத்தான் இனத்தை இழிவு செய்யும்***
***மடத்தான் வாழ்ந்த மடமை என்னே***[7]

*என்று தமிழ்ப்பித்தன். சீன முதலாளிகளிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு தமிழினத்தைச் சார்ந்த கங்காணிகள் தமிழ்களை ஏமாற்றுவதும் முறையான கூலிகொடுக்காததும் முள்மரக்காட்டினில் ஏமாற்றப்பட்டு அடித்துத் துன்புறுத்திய கொடுமைகளைப் பதிவு செய்துள்ளார். இன்றைய மலேசிய, சிங்கப்பூரின் செழிப்புக்கு செங்குருதி சிந்திய தமிழர்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்கத்தக்கது.*

**வறுமை**

**கொடிதினும் கொடிது இளமையில் வறுமை**[8] *என்பாள் அவ்வை. இளமையில் மட்டுமன்று எக்காலத்திலும் வறுமை கொடுமையைத் தந்து செல்வதாகவே இருக்கிறது. வறுமையால் செத்தொழிந்தவர்கள் ஏராளம். ஆனால் இயற்கையாக நிகழும் வறுமையை மானுட சமுதாயம் எளிதாக வென்று விடுகிறது. ஆனால் அதிகார முதலாளித்துவ வர்க்கத்தால் உருவாக்கப்படுகின்ற வறுமையை அவ்வளவு எளிதில் மனித சமுதாயத்தால் வென்றிட முடியாமல் அல்லோலப்படுவதைப் பார்க்க முடிகிறது. அப்படி மலேசியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளியரின் வாழ்க்கையின் வறுமை நிலைமையை எடுத்துக்காட்டும் விதமாக*

***முந்தி வறுமை விஞ்ச மூப்பொடு பசித்தீ வாட்ட***
***குந்தக் குடிசையும் இன்றி கும்பி கொதிக்கும் நிலையில்***
***கந்தை எனினும் அதனைக் கசக்கிக் கட்ட முயலின்***
***கந்தை பிரிதொன் றுண்டோ காயும்வரையிற் கட்ட***[9]

*என்ற கவிதை வரிமூலம் உணர்த்துகிறார் கவிஞர். ரப்பர் தொழிலாளியின் வீட்டில் அமர்ந்துண்ண வழியில்லை, காரணம் வீடியில்லை.உண்ண உணவில்லாமல் வயிறு கொதிக்கிறது என்றும் மாற்றுவதற்கு துணி இல்லாத நரக வாழ்க்கை வாழ்ந்த வாழ்க்கையை எடுத்தியம்புகிறார். இக்கவிதையினுக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக*

***கந்தையானாலும் கசக்கிக்கட்டு***
***அதுசரிதான்***
***அது காயும்வரையில்***
***எதைக்கட்டுவது?***[10]

*என்ற புதுக்கவிதையை இங்குஒப்புநோக்குவது குறிப்பிடத்தக்கது.*

**கைம்பெண் மறுமணம்**

*கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்வதை ஆதரித்து* **துணியிழந்து பெண்களுட்கு காதல் பொய்யோ? சுகம் வேண்டா திருப்பதுண்டோ அவர்கள் உள்ளம்**[11] *(ப.121) திருமணம் என்னும் புதுவாழ்க்கை இணைந்து வாழ்கிற இணையர்களில் ஒருவர் விபத்தினாலோ,கொடூர மிருகங்களாலோ நோய்களினாலோ இறந்துவிடுகிற பொழுது*

கணவனை இழந்த பெண்ணானவள் சிறியவயதாக இருந்தாலும் அவர்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்ளக் கூடாதபடி இங்கு பல்வேறு ஒழுக்கமுறைகளை கடைப்பிடித்துள்ளனர். இதைக்கண்டு பொறுக்காத கவிஞர் கோ.இராவணன்

**புளிக்கின்ற வாழ்க்கையை விதவையர் மட்டுமேன்**
**புவிமீது மறுசென்மம் பெற்றிங்கே நல்வாழ்க்கை**
**புரிகின்ற மாந்தர் யாரோ?[12]**

என்று பாடியுள்ளார். விளைநிலம் போல இருக்கின்ற பெண்ணை வளம்காண விரும்புகின்ற ஆடவனில்லை என்றும் கவலை தோய்ந்த முகத்தை உடைய கைம்பெண்ணை மணந்து மகிழ்ச்சினைத் தரும் மணமிலாத இளைஞர்களே இருக்கின்றனர். கணவனை இழந்த பெண்ணின் கனிபோன்ற அழகு நலம் கெட்டுப் போவதை எண்ணி தாலி கட்ட எவருமே முன்வருவதில்லை என்று வருந்திப் பாடியுள்ளது அவரது பெண் சமுதாயத்தின் மீதான சமூக அக்கறையைப் பறைசாற்றுகிறது.

**வரதட்சணை**

பெண்களை கொத்தடிமைகள் போல இந்த ஆடவர் சமுதாயம் திருமணம் செய்ய விலைபேசுகின்ற கொடுமைதான் வரதட்சனை கேட்பது. சமுதாயத்தில் வரதட்சனையால் எத்துனையோ குடும்பங்களில் பெண்களுக்கு திருமண நடைபெறாமல் தன் இளமைக் காலத்தையெல்லாம் இழந்து வயது முதிர்ந்து திருமணமே செய்துகொள்ளாமல் வாழ்ந்துவிடுகிற பேரவலத்தை எடுத்துக்காட்டும் விதமாக

**முதுகெலும் பில்லா ஆண்கள் முழுவதும் அறிந்திருந்தும்**
**அது இது என்று கேட்டே அரிவையர் தமைம ணக்கும்**
**புதுவித உலகம் கண்டோம் புன்மையே அன்றி ஏதும்**
**இதனிலே சிறப்பும் உண்டோ இறைவனே இதுயார் கூத்து?[13]**

என்று சீ.மோகனேசுவரி வரதட்சனைக் கேட்கிற ஆடவர்களைக் குறித்து இறைவனிடம் வினா எழுப்புவதாக இக்கவிதை அமைந்துள்ளது. மேலும் பெண்களுக்காக உரிமை பேசுகிறவர்களாக இருக்கிறவர்கள் கூட தனது திருமணத்தின்போது பெண்ணிடம் வரதட்சனைக் கேட்போராக இருப்பதைக் குறித்து கவிஞர் வருத்தத்தைப் பதிவுசெய்துள்ளார். வெளியுலகின் நேர்மையானவர் போலவும் உள்ளே வருகிறபொழுது அவர்களின் சுயம் மாறுபடுவதைச் சுட்டிக்காட்டி சாடுவதைக் காண முடிகிறது.

**மகளிரை இழிவு செய்யல்**

பெண்கள் கணவனோடு குழந்தையைப் பெற்றெடுத்து வாழ்வது மட்டுமே வாழ்க்கை அன்று. எல்லாவிதமான சமூகச் செயல்பாடுகளிலும் பங்கெடுத்து சுயமான அறிவோடு செயல்படவேண்டுமென்றே பெண்களுக்கு கல்வி கொடுக்கப்பட்து. அக்கல்வியினால் மட்டுமே பெண்ணைச் சுற்றி நடக்கிற அநியாயங்களிலிருந்து விடுபட்டு பாதுகாத்துகொள்ள முடியும். ஆகவேதான் மகாகவி பாரதியார் பெண்களுக்கு புரட்சிகர உணர்வையும் ஆண்களுக்கு **தையலை உயர்வு செய்[14]** என்று அறிவுரையும் கொடுத்தார். தமிழ்த்தென்றல் திரு.வி.க. **பெண் உரிமை இழந்த நாள் தொட்டு நம்நாடு அடிமைக்குழியில் வீழ்ந்து வருகிறது[15]** என்று வருந்துகிறார். பெண்களை இழிவு படுத்துவதாலும் மட்டந்தட்டுவதாலும் இச்சமூகத்தின் வளர்ச்சி பாதிப்படைகிறது என்பது கண்கூடு என்பதை

**துப்புக்கெட்ட ஆண்களுக்கு வெட்கமே இல்லை-அழகு**
**தோகையரைப் பழிக்காவிட்டால் தூக்கமே இல்லை**
**பழையதமிழ் இலக்கியங்கள் படிச்சதும் உண்டா?- அழகு**

***பாவையரைப் புலவரெல்லாம் பழிச்சதும் உண்டா?***
***பிழைபொறுக்காக் கண்ணகியின் வாரிசு நாங்கள்-ஆண்***
***பிள்ளைகளே ஜாக்கிரதை விலகியே போங்கள்***[16]

என்று பெண்களின் உடையையும் அவர்களின் ஒப்பனை செய்வதைக் குறித்தும் பேசிக்கொண்டும் பழித்துக்கொண்டும் வருகிற ஆணாதிக்க மனோநிலை உடையவர்களை குட்டுவன போல இக்கவிதையை அமைத்து, பாலின பேதம் களைவதற்குரிய முயற்சியைக் கவிஞர் மேற்கொண்டுள்ளதை பார்க்க முடிகிறது. ***ஒரு பெண்ணின் குணத்தை அறிவுத் திறமையை அவளது உடையுடன் ஒப்பிடும் பாங்கு ஆணாதிக்கத்தின் உச்சம்***[17]**.**

***சமத்துவ சிந்தனை***

'ஒற்றுமைதான் உயர்வு' என்னும் நெறியுடையைக் கடைப்பிடித்து வாழ்கிற மானுட சமூகத்திற்கு கேடுவிளைவிக்கும் மூலங்களாக மத வெறியுணர்வும் சாதிவெறியுணர்வும் திகழ்கின்றன. சாதிமதங்களால் ஏற்படுகிற கலவரங்களும் பாதிப்புகளும் மனதை நெருடும் வகையிலேயே நிகழ்ந்துவிடுகின்றன. பூமியில் பிறந்த யாவரும் பிறப்பால் சமமானவர்களே ஆனால் இங்கு தொழில் அடிப்படையில் என்று செய்யும் தொழிலில் பேத மனப்பான்மையுடன் செயல்பட்டு உயர்சாதினர்க்கென்று சில தொழில்களையும், ஒதுக்கப்பட்ட மக்களை சில தொழில்களையும் செய்ய நிர்பந்தித்து சிலரிடத்து காணப்பட்ட வஞ்சக எண்ணத்துடன் பழிவாங்கும் நோக்குடனும் ஒதுக்கப்பட்ட சாதியினராக சித்தரிக்கப்பட்டுள்ளதை வரலாற்றின் பக்கங்கள் உணர்த்துகின்றன. ஆகவேதான் பிறப்பில் எவருமிங்கே சமமென்கிற பொதுமைச்சிந்தனையைப் ***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்***[18] என்று வள்ளுவப்பாட்டனார் குறிப்பிடுகிறார். அவர் கண்ட தமிழ்ச்சமூகத்தில் வேற்றுமையுணர்வும் முரண்பாட்டுச் சிந்தனையும் தோற்றுவிக்கும் காரணிகளாக விளங்குகின்ற சாதிய மதவாதச் சிந்தனையைக் கொண்டவர்களைச் சாடும்விதமாக

***தொட்டாலும் தீட்டென்று சொன்னார்-அந்த த்***
***தூய நறுந்தமிழ்த் தோகை மயிலுடல்***
***பட்டாலும் தீங்கென்று சொன்னார்-இங்கு***
***பள்ளுபறை யென்று பாகுபடுத்திக்***
***கெட்டாலும் மேற்சாதி மேலாம்-என்று***
***கெட்டமதிகொண்டு கீழ்மையில் நின்றார்***
***மொட்டொன்றை முள்ளென்று சொன்னார்-இவர்***
***மூடமதிகொண்டு வாடப்புரிந்தார்.***[19]

என்று தமிழ்த்தும்பி என்ற கவிஞர் பாடியுள்ளார். இந்திய தமிழ்மக்கள் கூலிகளாக மலேசியா, பிஜித்தீவு, அந்தமான் போன்ற தீவுகளுக்குச் சென்றாலும் சாதிய சிந்தனையுனுடந்தான் செயல்பட்டுள்ளனர் என்பதை இக்கவிதை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக மலேசியா பினாங்குப் பகுதிகளில் உயர்சாதி கங்காணிகளிடம் இத்தகைய சாதிய வேற்றுமை நிலவி வந்துள்ளதை அறிகிறோம். ***சாதி இரண்டொழிய வேறில்லை***[20] என்று அவ்வை மொழி கேட்டும் வாழ்ந்த ***நம்நாட்டுச் சமுதாயம் ஜாதிய வேற்றுமையினால் செல்லரித்துக் கிடக்கிறது***[21]**.** மனிதன் மனிதனாக வாழ்வதற்குப் பதிலாக சாதிக்காக வாழ்வது சமுதாயத்தைச் சீரழிக்கக் கூடிய பெருந்தீங்காகும்.

***மரபுமாறாச் சிந்தனை***

இந்தியப் பெருங்கண்டத்திலிருந்து பஞ்சக் கொடுமையினால் தமிழர்கள் உலகின் வெவ்வேறு நாட்டிற்குக் கப்பல்களின் மூலமாக கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுள் சிலர்

*தமிழ்நாட்டில் அந்நியர்களுக்கு விசுவாசமாக நடந்து கொண்டவர்கள் அவர்கள் ஆண்ட பகுதிகளுக்கு கங்காணிகளாகவும் கணக்குப் பிள்ளைகளாகவும் செயல்பட்டு தங்களது விசுவாசத்தைக் காட்டுவதற்குத் தமிழ்மக்களை காட்டுமிராண்டிக் கூட்டம்போல நடந்து கொண்டனர் என்பது வரலாறு உணர்த்தும் செய்தி. காலங்காலமாக தமிழ் நிலப்பகுதிகளில் பாடிவந்த பழகிவந்த பழக்கவழக்கங்களை மறந்தனர். தேவாரம் திருவாசகம் போன்ற தமிழ்ச்சமூகத்தின் இறை நூல்களை முன்னோர்கள் ஓதிவந்தனர். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு பிழைப்புக்காக வெளியேறி தஞ்சம் புகுந்த நிலப்பகுதியில் இருந்த சமயத்தைத் தழுவினர் என்பதை எடுத்துக்காட்டும் விதமாக*

***தமிழனுக்குத் தனைப்பெற்ற தாய்தெரிய வில்லை***
***தன்னோடு பிறந்தவனின் முறைவிளங்க வில்லை***
***சமயத்தைப் பிரிந்துமறு சமயத்திற்கு சேர்ந்து***
***தம்பி என வரும்போது தழுவிக் கொள்கின்றான்***
***சமயத்துள் தான்பிறந்த சமயத்துள் நின்று***
***சந்திக்க வரும்போது சாதிபார்க்கின்றான்***
***இமயத்தில் கொடிபொறித்த இனமிவனாம் அந்தோ***
***இவனோடு பிறந்திடநான் என்னவினை செய்தேன்.***[22]

*என்று கரு.திருவரசு பாடியுள்ளார். அதிகார வர்க்க ஆட்சியரின் சமயங்களுக்கு மாறி அவர்களின் நன்மதிப்பை பெற்றால் சகாயமான சூழ்நிலையை மாற்றிக்கொள்ளலாமென்று கங்காணிகள் சிலர் சமயம் மாறினர். தலைமுறை தலைமுறையாக வழிபாடு செய்து வந்த இறைவழிபாட்டை மறந்துள்ளதை நினைவுபடுத்தும் வகையில் பாடப்பட்டுள்ளது. இக்கவிதையில் அக்காலத்தின் சூழ்நிலையைப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. அதே வேளையில் மலேசிய மண்ணில் வாழ்ந்தாலும் இந்திய தேசத்தில் தமிழ் மன்னர்களின் சீரிய செயலை எண்ணிப் பெருமை கொள்ளக் கூடிய தமிழ்மரபுச் சிந்தனைப் போக்கும் புலப்படுவதைக் காணமுடிகிறது.*

***முடிவுரை***

*கூலிவேலைக்கு சென்ற தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையான சூழ்நிலைகளையும் தமிழர்களே தமிழர்களுக்கு எதிராக மாறிய நிலையையும் அவர்களது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக பூர்வீக நிலப்பரப்பை விட்டுவேறு மண்ணுக்குச் சென்று தாங்கள் பட்ட துயரத்தைப் படம்பிடித்து எதிர்காலத் தலைமுறையினருக்கு கடத்தும் விதமாகவும் அமைத்துள்ளனர். இங்குள்ள தமிழர்கள் எவ்விடம் போனாலும் அவர்களிடையே ஊறிப்போன சாதிய மேலாதிக்க சிந்தனை மிகுந்திருப்பதைக் கண்டிப்பதோடு பெண்களை இழிவுபடுத்துகிற ஆணாதிக்கச் சாதியினரைச்சாடும் விதமாகவும் பாடியுள்ளனர். மலேசியத் தமிழ்க்கவிதையானது மலேசியத் தமிழர்களின் வாழ்வியலை அறிந்துகொள்ளவும், அவர்களுக்கென்று இருக்கின்ற இறையாண்மை சிந்தனையைப் புலப்படுத்துவனவாக விளங்குவதோடு மலேசியக்கவிதைகளில் அம்மண்ணின் முகமும் அகமும் மிகுந்து காணப்படுகின்றன. தமிழ்நாட்டுக்குரிய சிந்தனை மரபுமுகம் ஆங்காங்கே வெளிப்பட்டு சுடர்வதைக் காணமுடிகிறது. மலேசியக்கவிதைகளின் போக்கானது மண்ணையும் மக்களையும் நேசிப்பனவாகவும், அதன் பொருளானது மக்களின் வாழ்வியலின் அசல்தன்மையை அலசுவதாகவும் அமைந்துள்ளன. எங்கிருந்தாலும் கவிஞர்கள் மானுட மேன்மைக்கான படைப்பையே படைத்துள்ளனர் என்பதை ஆய்வின் வழிகண்ட முடிவாக அமைகிறது.*

**அடிக்குறிப்பு**

1. மலைநாடு *1962-08-31*
2. ஔவைநடராசன்,கம்பர்காட்சி,சேகர் பதிப்பகம்,எம்.ஜி.ஆர் நகர்,சென்னை, ப.*40*
3. தமிழ்நேசன் மெர்டோக்கா மலர், *1967*
4. இரா.மாயாண்டி, சங்க இலக்கியத்தில் கற்பனை,எழிலகம் பதிப்பகம்,சென்னை ப.*143,1980.*
5. திருமுருகன்.இரா,ஓட்டைப்புல்லாங்குழல்,பாவலர் பண்ணை,புதுச்சேரி, ப.*15, 1990,*
6. மூர்த்தி.து,புதிய நோக்கில் தமிழியல்,ப.*119,*
7. தமிழ்நேசன் இதழ்,*1983.*
8. அவ்வையார், நீதிநூற்கோவை,பாரிநிலையம்,சென்னை-*1,* ப.*69,1981.*
9. நெடுமாறன்.முரசு,(தொ.ஆ),மலேசியக்கவிதைக்களஞ்சியம்,அருள்மதியம் பதிப்பகம்,சிலாங்கூர்,மலேசியா,ப.*11,1997*
10. மேலது, முன்னுரை பக்கம் இல்லை
11. பாரதிதாசன்,பாரதிதாசன் கவிதைகள்,செந்தமிழ்நிலையம்,புதுக்கோட்டை,ப.*121,1975.*
12. தமிழ்நேசன் இதழ்,*1976-10-03*
13. புதியசமுதாயம் இதழ்,அக்டோபர் *1985.*
14. பாரதியார்,பாரதியார் கவிதைகள்,பழனியப்பா பிரதர்ஸ்,சென்னை-*05,* ப.*173,1964.*
15. திரு.வி.க, பாக்யலெட்சுமி மாத இதழ்,ப.*28*
16. தமிழ்முரசு *1968-04-14*
17. பேனாவின் கைப்பிடித்து,டி.வி.எஸ்.சோமு ப.*68*
18. குறள் எண்;*972,* மு.வ தெளிவுரை,சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகம்,சென்னை, *2001.*
19. தமிழ்மலர் இதழ் *1967-06-18*
20. அவ்வை,நீதிநூற்கோவை,பாரிநிலையம்,சென்னை-*1,* ப.*69,1981.*
21. அண்ணா, முக்கனி,அன்புநிலையம் பதிப்பகம்,சென்னை-*1*ப.*37,1967.*
22. தமிழ்மலர் *1978-07-16*